## 3. நடைமுறைக் கேள்வி

### சென்னை கடற்கரையில் இரண்டு சீனக் கப்பல்கள் வந்திருப்பது குறித்து

திரு. நா. வீராசாமி : தலைவரவர்களே, என்னுடைய பாய்ண்ட் ஆஃப் ஆர்டர், இன்று நாட்டிலே ஏற்பட்டிருக்கிற ஒரு ஆபத்தான சூழ்நிலையைப் பற்றியது. இன்று பத்திரிகையிலே, நமது கடற்கரையில், இரண்டு சீனக் கப்பல்கள், தமிழகத்தினுடைய எல்லையிலே, குவாங் ஜான் 3, குவாங் ஜான் 2 என்று இரண்டு கப்பல்கள் வந்திருப்பதாகவும், அதிலே 36 சீனர்கள் வந்திருக்கிறார்கள் என்றும் செய்தி வந்திருக்கிறது. அந்தக் கப்பல்களிலே எலக்ட்ரானிக் இயந்திரங்கள் எல்லாம் வைத்திருப்பதாகச் சொல்கிறார்கள். நம்முடைய கடற்கரையின் ஆழத்தைக் கண்டுபிடிக்கக் கூடிய கருவிகள் எல்லாம் வைத்திருப்பதாக செய்தி வந்திருக்கிறது. ஏன், இதை எழுப்புகிறேன் என்றால், முன்பு சீன யுத்தம் வந்த நேரத்திலே, இரண்டு கப்பல்கள் வந்திருக்கின்றன. இதனால், நாட்டுக்கு ஆபத்து வருமோ என்ற அச்சம் வந்திருக்கிறது. இதைப் பற்றி ஏதாவது தகவல் வந்திருக்கிறதா ? மாண்புமிகு அமைச்சரவர்கள் இதைப்பற்றி விளக்குவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. க. உரோ. எட்மண்ட் : இது எப்படி பாய்ண்ட் ஆஃப் ஆர்டரின் கீழ் வரும்?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர், பாய்ண்ட் ஆப் ஆர்டர் எழுப்பியிருக்கிறார். இன்னும் முடிக்கவேயில்லை. அதற்குள் நீங்கள் . . .

திரு. நா. வீராசாமி : அரசாங்கத்திற்கு ஏதாவது தகவல் வந்திருக்கிறதா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, இது பற்றி மத்திய சர்க்காரினுடைய காவல் துறையினர் நடவடிக்கை எடுத்து, அவர்களை எல்லாம் பிடித்து வைத்திருக்கிறார்கள். போலீசார் நடவடிக்கை எடுப்பதாக இருந்தாலும் கூட, ஆந்திர மாநிலப் போலீசார்தான் தலையிட்டு நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கிறது. அவ்வளவுதான் அதைப்பற்றிச் சொல்ல முடியும்.